ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

குறைந்த அளவிலான தொகை பெறுகிற அமைச்சர். நாம்கொடுப்பது அவ்வளவுதான். 1 கோடியே சொச்சம் தான் கொடுக்கிறோம்.

2. அறிவிப்புகள்--தொடர்ச்சி

(ஆ) பேரவை அலுவல்கள் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று 2-5-1995-ஆம் நாளன்று அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவின் படி சட்டமன்றப் பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு அமைய வேண்டுமென முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

		கோரிக்கை எண்		
3-5-1995 (புதன்கிழமை)	காலை ..	23	—	கூட்டுறவு
	மாலை ..	46	—	செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல்
		21	—	மீனளம்
4-5-1995 (வியாழக்கிழமை)	காலை	30	—	பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன்
	மாலை	25	—	கைத்தறியும், துணித்தொழிலும்.
5-5-1995 (வெள்ளிக்கிழமை)	காலை	9	—	மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.

7 — மாநிலச் சட்டமன்றம்

8 — தேர்தல்கள்

41 — ஓய்வூதியங்களும் ஏனைய ஒய்வுக்கால நன்மைகளும்

42 — பல்வகை

60 — பல்வகை மூலதனச்செலவு

61 — மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்

1995-96-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும் மற்றும் முடிவு பெறாத மானியக் கோரிக்கைகள் பொறுத்தவரை விவாதமின்றி வாக்கெடுப்பு, சரியாக 1.30 மணிக்கு எடுக்கப்பட வேண்டும்.

வாக்கெடுப்பிற்குப் பின் 1995-96-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளுக் கான நிதி ஒதுக்கச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்தல்.

மாலை (1) 1994-ஆம் ஆண்டு மனித உறுப்புகள் மாற்றுச் சிகிச்சை சட்டத்தினை (மையச் சட்டம் 42/1994) தமிழ்நாடு மாநிலம் ஏற்றுக்கொள்வது குறித்து அரசினர் தனித் தீர்மானம்.

(2) புகையிலையையும், புகை யிலையினால் தயாரிக்கப் பட்ட எந்த வடிவிலான

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

உற்பத்திப் பொருட்களையும் பயன்படுத்துவதைத் தடை செய்தல் குறித்து அரசினர் தனித் தீர்மானம்.

(3) அரசினர் சட்டமுன் வடிவுகள் ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும்.

சனிக்கிழமை சட்டமன்ற பேரவைக் கூட்டம் உண்டு.

6-5-1995 (சனிக்கிழமை)	காலை ..	1995-96-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு மற்றும் அரசினர் சட்டமுன் வடிவுகள், ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும்.
	மாலை ..	அரசினர் சட்டமுன் வடிவுகள்-ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும்.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் பகல் 1.30 மணி வரையிலேயும் நடைபெறும். மீண்டும் மாலை 4.00 மணிக்குக் கூடும். பேரவை வழக்கம் போல் காலை 10.00 மணிக்குக் கூடும்.

இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (3-5-1995) காலை 10.00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 6.24 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

119. 1993–94-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பன்னிரெண்டாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).